பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

முன்னுரை 25

1 மிக முக்கியமான அடிப்படைகள் 27

2 இஸ்லாமியப் பெண்ணுக்குத் திருக்குர்ஆனின் வழிகாட்டல்கள் 39

3 பெண்களால் ஏற்படும் குழப்பமும் ஆண், பெண் கலந்துறவாடுவதால் உண்டாகும் தீங்கும் 48

4 கண்ணியமான நபித்தோழியர் ஒருவரின் நிகழ்வில் கிடைக்கின்ற பெரும் படிப்பினை 56

5 சொர்க்கவாசிகளில் உள்ள ஒரு பெண்ணின் நிகழ்வு 63

6 கண்ணியமே பெண்ணுக்குரிய சட்டம் 70

7 குர்ஆன் 24:31 வசனம் குறித்த சிந்தனைகள் 79

8 உபதேசமும் நல்வாழ்த்தும் 89

9 ஆடை மூலம் ஏற்படும் அருளும் அதனால் உண்டாகும் தீங்கும் 96

10 ஈமானிய அலங்காரம் 108

1

மிக முக்கியமான அடிப்படைகள்

❀

நன்மை புரிய வாய்ப்பளிக்கப்பட்ட பெண்ணே! இஸ்லாமியக் கல்வியோடும் இறைநம்பிக்கையோடும் அல்லாஹ் உன் வாழ்நாளை அழகாக்கி வைப்பானாக. மேலும், உன் நேரங்களை அவனுக்குக் கீழ்ப்படியக்கூடியதாகவும் நன்மை புரியக்கூடியதாகவும் ஏற்படுத்தித் தந்து அழகாக்கி வைப்பானாக. முக்காடிட்டும் நாணத்தோடு வாழவும் உன் உடலை அழகாக்கி வைப்பானாக. இந்த உபதேசத்தின் மூலம் அல்லாஹ் உனக்குப் பலனளிக்க வேண்டும் என்று நம்பிக்கை கொண்டு இதை உனக்கு அன்பளிப்புச் செய்கிறேன். குறிப்பாக, இந்த உபதேசத்தில் எங்கெல்லாம் நன்மை புரியவும் நிலைத்திருக்கவும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடக்கவும் வழிகாட்டல் இருக்குமோ அங்கெல்லாம் அவன் உனக்குப் பலன் அளிக்க வேண்டும் என ஆதரவு வைக்கிறேன்.

சிறப்பிற்குரிய பெண்ணே! இந்த இஸ்லாமிய மார்க்கத்தைக் கொடுத்து அல்லாஹ் உனக்குச் செய்துள்ள அருட்கொடை மகத்துவம் வாய்ந்தது. இன்னும், மார்க்கத்தின் மூலம் அல்லாஹ் உனக்கு நேர்வழி காண்பித்து உபகாரம் செய்ததும் மிகப் பெரியது. இதை நீ உணர வேண்டும். ஏனெனில், அல்லாஹ் இந்த மார்க்கத்தையே தன் அடியார்களுக்காகப் பொருந்திக்கொண்டு, முழுமைப் படுத்தியுள்ளான். இதைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் அல்லாஹ் ஏற்கமாட்டான். அல்லாஹ் வேதத்தில் கூறுகிறான்:

إِنَّ الدِّينَ عِنْدَ اللَّهِ الْإِسْلَامُ

‘நிச்சயமாக அல்லாஹ்விடம் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான்.’ (குர்ஆன் 3:19)

وَمَنْ يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ

2

இஸ்லாமியப் பெண்ணுக்குத் திருக்குர்ஆனின் வழிகாட்டல்கள்



குர்ஆன் நேர்வழியாகவும் அருளாகவும் மக்களுக்காக இறக்கப்பட்ட அல்லாஹ்வின் வேதமாகும். குர்ஆன்தான் உண்மையான நற்பாக்கியம், இம்மை மற்றும் மறுமையின் வெற்றிக்குரிய புத்தகமாகும். அதில் மனிதர்களுக்கு வழிகாட்டலும் நோய்களுக்கு நிவாரணமும் இம்மை மற்றும் மறுமையின் நற்பாக்கியமும் உள்ளன. எவன் குர்ஆனின் பாதையைத் தவிர்த்து நற்பாக்கியத்தைத் தேடினானோ அவன் துர்பாக்கியவான் ஆகிவிடுவான். அதன் வழிகாட்டலைத் தவிர்த்து எவன் கண்ணியம் தேடுகின்றானோ அவன் இழிவடைந்து விடுவான். எவன் அதனுடைய வழிகாட்டலைத் தவிர்த்து மரியாதையைத் தேடுகிறானோ அவன் கேவலப்படுத்தப்படுவான். அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللَّهُ وَرَسُولُهُ أَمْرًا أَنْ يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ وَمَنْ يَعْصِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالًا مُبِينًا

‘அல்லாஹ்வும் அவனுடைய ரஸூலும் ஏதேனும் ஒரு காரியத்தை முடிவு செய்துவிட்டால் மூஃமினான எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் தம் காரியங்களில் (அத்தீர்ப்புக்கு மாறாக, வேறெதையும்) தேர்ந்தெடுக்கும் உரிமையில்லை. எவர் அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் மாறுசெய்கிறாரோ அவர் பகிரங்கமான வழிகேடாகத் திட்டமாக வழிகெட்டுவிட்டார்.’ *(குர்ஆன் 33:36)*

அல்லாஹ் குர்ஆனை அடியார்களுக்கு ஒளியாகவும் பகுத்தறிவுக்கு உரியதாகவும் ஆக்கியுள்ளான். இம்மை மற்றும் மறுமையின் நற்பேறு, அல்லாஹ்வின் நேரான வழி, அவனின் உறுதியான பாதை ஆகியவற்றைக் குர்ஆனில் அல்லாஹ் மனிதர்களுக்கு காண்பிக்கிறான். அல்லாஹ் கூறுகிறான்:

3

பெண்களால் ஏற்படும் குழப்பமும் ஆண், பெண் கலந்துறவாடுவதால் உண்டாகும் தீங்கும்

❀

சத்திய மார்க்கமான இஸ்லாம் நேரிய அறிவுரைகளாலும் புகழுக்குரிய வழிகாட்டுதல்களாலும் இஸ்லாமியப் பெண்ணைப் பாதுகாக்கிறது. அவளுடைய சிறப்பையும் கண்ணியத்தையும் பாதுகாத்து, அவளின் கண்ணியத்திற்கும் நற்பேறுக்கும் உத்தரவாதமளிக்கிறது. சந்தேகத்திற்குரிய, குழப்பமிக்க, தீங்கான அனைத்து வழிகளை விட்டும் தூரப்படுத்தி அழகிய வாழ்க்கைக்குரிய காரணங்களை தயார்படுத்திக் கொடுத்துள்ளது.

இவை அனைத்தும் அல்லாஹ் தன் அடியார்களுக்குச் செய்துள்ள அருளாகும். அவன் தனது மார்க்கத்தை அடியார்களுக்கு நன்மை அளிக்கக்கூடியதாகவும், அவர்களின் பிரச்சினைகளை சரிப்படுத்தக் கூடியதாகவும், அவர்களின் கோணல் வழிகளை நேராக்கக் கூடியதாகவும், அவர்களின் நற்பேறுக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடியதாகவும் இறக்கிவைத்துள்ளான். இதில் உள்ளதுதான், ஆண் பெண்ணுக்கு இடையே உண்டாகிற குழப்பங்களின் ஆணிவேரைத் துண்டித்துவிடுகிற உறுதியானத் திட்டங்களை அல்லாஹ் ஏற்படுத்திக்கொடுத்திருப்பதாகும். மேலும், இம்மையின் இழிவையும் மறுமையின் வேதனையையும் விட்டு அடியார்களைக் காப்பதற்காகவும், அவர்களின் மானம் மரியாதைகளைப் பாதுகாப்பதற்காகவும், அவர்களுக்கு அவன் கிருபை செய்வதற்காகவும், அழிவை உண்டாக்குகிற அருவருப்பான பாவச் செயல்களை விட்டும் மனிதன் தவிர்ந்திருப்பதற்காகவும் அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுத்துள்ள இத்திட்டங்கள் அவனுடைய அடியார்களுக்கு உதவியாக இருக்கின்றன.

இஸ்லாமிய நிழலிலும் அது கூறுகின்ற அறிவுரைகளின்படியும் அதன் ஒழுக்க விழுமியங்களின்படியும் அழகிய வாழ்க்கை

5

சொர்க்கவாசிகளில் உள்ள ஒரு பெண்ணின் நிகழ்வு

❀

இந்த நிகழ்வு படிப்பினையும் உபதேசமும் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த, வியப்பான நிகழ்வாகும். சொர்க்கவாசியான ஒரு பெண்ணின் நிகழ்வாகும். அதாஉ இப்னு அபீ ரபாஹ் ﵀ கூறுகிறார்கள்:

قَالَ لِي ابْنُ عَبَّاسٍ أَلَا أُرِيكَ امْرَأَةً مِنْ أَهْلِ الْجَنَّةِ قَالَ قُلْتُ بَلَى، قَالَ هَذِهِ السَّوْدَاءُ، أَتَتِ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَقَالَتْ: إِنِّي أُصْرَعُ وَأَتَكَشَّفُ، فَادْعُ اللَّهَ لِي قَالَ إِنْ شِئْتِ صَبَرْتِ وَلَكِ الْجَنَّةُ وَإِنْ شِئْتِ دَعَوْتُ اللَّهَ لَكِ أَنْ يُعَافِيَكِ قَالَتْ لَا بَلْ أَصْبِرُ، فَادْعُ اللَّهَ أَنْ لَا أَتَكَشَّفَ أَوْ لَا يَنْكَشِفَ عَنِّي قَالَ فَدَعَا لَهَا

இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் என்னிடம், 'சுவர்க்கவாசிகளில் உள்ள ஒரு பெண்ணை உங்களுக்கு நான் காண்பித்துத் தரட்டுமா?' என்பதாகக் கேட்க, 'ஆம்' என்று நான் கூறினேன். அப்போது இப்னு அப்பாஸ் கூறினார்கள்: அவர் இந்தக் கருப்புப் பெண்தான். இவர் நபி ﷺ அவர்களிடம் வந்து, 'நான் வலிப்பு நோய்க்கு ஆளாக்கப்பட்டுள்ளேன். (வலிப்பு ஏற்படும்போது) நான் ஆடை திறந்த நிலையில் ஆகிவிடுகிறேன். ஆகவே, எனக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்று கேட்டார். அதற்கு நபியவர்கள், 'நீர் நாடினால் பொறுமையோடு இருக்கவும். உமக்குச் சுவனம் உண்டு. நீர் நாடினால் உமக்கு அல்லாஹ் நற்சுகம் அளிக்க வேண்டும் எனப் பிரார்த்தனை புரிகிறேன்' என்பதாகக் கூறினார்கள். அப்போது இப்பெண்மணி, 'நான் பொறுமையோடு இருந்துகொள்கிறேன். எனக்கு (வலிப்பு ஏற்படும்போது) ஆடை விலகிக்கொள்கிறது. ஆகவே, ஆடை விலகாமல் இருக்க அல்லாஹ்விடம் எனக்காகப் பிரார்த்தியுங்கள்' என்று கேட்க, நபியவர்கள் அப்பெண்ணுக்காகப் பிரார்த்தனை புரிந்தார்கள். *(புகாரீ 5328, முஸ்லிம் 6736)*

6

கண்ணியமே பெண்ணுக்குரிய சட்டம்

❀

இஸ்லாமிய சமுதாயமே! அல்லாஹ் நமக்கு இந்த மார்க்கத்தை யும் நேரான பாதையையும் வழங்கி ஹிதாயத் எனும் நேர்வழி காண்பித்திருப்பது அவன் நமக்கு செய்துள்ள பேரருட்கொடையும் உபகாரமும் ஆகும். இதுவே அல்லாஹ்வின் மார்க்கமாகும். இதைத்தான் அல்லாஹ் தன் அடியார்களுக்குப் பொருந்திக் கொண் டான். இதைத் தவிர்த்து வேறு எந்த மார்க்கத்தையும் அவன் தன் அடியார்களிடம் பொருந்திக் கொள்ளமாட்டான். அல்லாஹ் குர்ஆனில்,

الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الْإِسْلَامَ دِينًا

'இன்றைய தினம் உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்கு நான் பரிபூரணமாக்கிவிட்டேன். மேலும், என்னுடைய அருட் கொடையை உங்களின்மீது முழுமையாக்கிவிட்டேன். இன்னும், உங்களுக்கு இஸ்லாமையே மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டேன்' *(5:3)* என்றும்,

وَمَنْ يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ

'எவரேனும் இஸ்லாம் அல்லாத வேறு மார்க்கத்தைத் தேடுவா ரானால் அவரிடமிருந்து அது ஏற்கப்படவேமாட்டாது. இன்னும், அவர் மறுமையில் நஷ்டமடைந்தோரில்தான் இருப்பார்' *(3:85)* என்றும் கூறுகிறான்.

அல்லாஹ் இந்த மார்க்கத்தைக் கொண்டே கொள்கைகள், செயல் பாடுகள், குணங்கள் ஆகியவற்றையும், மனிதனின் வெளிப்புறத் தையும் உள்ரங்கத்தையும் சீர்படுத்தியுள்ளான். இந்த மார்க்கத்தின் அழகு, பரிபூரணத்துவம் ஆகியவற்றைக் கொண்டு இதை அலங்கரித் துள்ளான். இம்மார்க்கத்தைப் பற்றிப்பிடித்துக்கொண்டவர் வெற்றி யடைந்துவிட்டார். இம்மார்க்கத்தை விட்டுவிட்டவருக்குச் சரியான

9

ஆடை மூலம் ஏற்படும் அருளும் அதனால் உண்டாகும் தீங்கும்

❀

ஓர் அருட்கொடையைப்பற்றி நினைவுகூரப்படுவது அதை அளித்தவனான அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்துவதற்கே ஆகும். நன்றி செலுத்துவதால் இன்னும் கூடுதலாக அல்லாஹ் கொடுப்பான். அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

وَإِذْ تَأَذَّنَ رَبُّكُمْ لَئِنْ شَكَرْتُمْ لَأَزِيدَنَّكُمْ وَلَئِنْ كَفَرْتُمْ إِنَّ عَذَابِي لَشَدِيدٌ

இன்னும் 'நீங்கள் நன்றி செலுத்தினால் திண்ணமாக உங்களுக்கு (எனது அருளை) அதிகப்படுத்துவேன். நீங்கள் நிராகரித்தால் நிச்சயமாக என்னுடைய வேதனை மிகக் கடினமானது' என்று உங்கள் இறைவன் அறிவித்ததையும் நினைவுகூர்வீராக! (14:7)

அல்லாஹ் தன் அடியார்களுக்குச் செய்துள்ள பெரும் அருட் கொடைகளில் ஒன்று, விதவிதமான பலதரப்பட்ட ஆடைகளை அவன் வழங்கியிருப்பதாகும். இது பெரும் அருளும் பேருபகாரமும் ஆகும். ஆகவேதான், அல்லாஹ் இந்த அருட்கொடையை எண்ணிச் சொல்லியுள்ளான். 'நிஅம்' – அருட்கொடைகள் என்பதாக மார்க்க அறிஞர்கள் பிரபலமாகச் சொல்கிற அந்நஹ்ல் அத்தியாயத்தில் அல்லாஹ் பெரும் அருட்கொடைகளைக் கூறும்போது ஆடை யைப் பற்றியும் கூறுகிறான். இந்த அத்தியாயத்திற்கு நிஅம் என்று பெயர் வரக் காரணம் அல்லாஹ் தன் அடியார்களுக்குச் செய்துள்ள அருட்கொடைகளை இந்த அத்தியாயத்தில் அதிகமாகச் சொல்லியுள்ளான். அவனுடைய அருட்கொடைகளைச் சொல்லி முடிக்கும்போது அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

وَاللَّهُ جَعَلَ لَكُمْ مِنْ بُيُوتِكُمْ سَكَنًا وَجَعَلَ لَكُمْ مِنْ جُلُودِ الْأَنْعَامِ بُيُوتًا تَسْتَخِفُّونَهَا يَوْمَ ظَعْنِكُمْ وَيَوْمَ إِقَامَتِكُمْ وَمِنْ أَصْوَافِهَا وَأَوْبَارِهَا وَأَشْعَارِهَا أَثَاثًا وَمَتَاعًا إِلَى حِينٍ وَاللَّهُ جَعَلَ

சிறந்தவர்களும் நல்லவர்களும் தங்களது மனைவிக்கும் பெண் பிள்ளைகளுக்கும் விலைகொடுத்து வாங்குவதற்குக் கண்ணியமான ஆடைகளைக் காணுவது என்பது சிரமமான காரியமாகவே உள்ளது. அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

صِنْفَانِ مِنْ أَهْلِ النَّارِ لَمْ أَرَهُمَا قَوْمٌ مَعَهُمْ سِيَاطٌ كَأَذْنَابِ الْبَقَرِ يَضْرِبُونَ بِهَا النَّاسَ وَنِسَاءٌ كَاسِيَاتٌ عَارِيَاتٌ مُمِيلاَتٌ مَائِلاَتٌ رُءُوسُهُنَّ كَأَسْنِمَةِ الْبُخْتِ الْمَائِلَةِ لاَ يَدْخُلْنَ الْجَنَّةَ وَلاَ يَجِدْنَ رِيحَهَا وَإِنَّ رِيحَهَا لَيُوجَدُ مِنْ مَسِيرَةِ كَذَا وَكَذَا

‘இரண்டு பிரிவினர் நரகவாசிகளில் அடங்குவார்கள். அவ்விரு பிரிவினரையும் நான் பார்த்ததில்லை. (முதலாவது பிரிவினர்) மக்களில் சிலர், பசுமாட்டின் வால்கள் போன்ற சாட்டைகளைத் தம்மோடு வைத்திருப்பார்கள். அவற்றைக் கொண்டு மக்களை அடிப்பார்கள். (இரண்டாவது பிரிவினர்) மெல்லிய உடை யணிந்து, தம் தோள்களைச் சாய்த்து (பெருமையாக) நடந்து, (அந்நிய ஆடவர்களின் கவனத்தைத்) தன்பால் ஈர்த்துக்கொள்கிற பெண்கள் ஆவார்கள். அவர்களின் தலைகள் (கூந்தல் முடிகள்) கழுத்து நீண்ட ஒட்டகங்களின் சாயக்கூடிய திமில்களைப் போன்றிருக்கும். அவர்கள் சுவனம் புகமாட்டார்கள். சுவனத்தின் வாடையையும் நுகரமாட்டார்கள். அதன் வாடையோ இவ்வளவு இவ்வளவு பயணத் தொலைவிலிருந்தே வீசும்.’ (முஸ்லிம் 2128)

இங்கு அவசியம் அறியப்பட வேண்டிய விசயம் என்னவென்றால், ஒரு பெண் முக்காடு அணிந்துகொள்வதும், வெட்கம்கொள்வதும், நாணம்கொள்வதும் அவளுக்கு வலுவுள்ள ஈமான் இருப்பதற்கும் மார்க்கப்பற்று இருப்பதற்கும் அடையாளமாகும். இது விசயமாக அன்னை உம்மு சலமா அவர்களுக்குச் சொல்லப்பட்ட சூழ்நிலை யை உதாரணமாகக் கொள்ளலாம். அதாவது ஒரு பெண் தன் கரண்டைக் காலை மறைப்பதற்காக ஒரு சாண் அளவுக்குக் கீழாடையை இறக்கிக்கொள்ள வேண்டும் என்று நபி ﷺ அவர்கள் கூறியபோது ‘அப்போதும் தெரிந்தால் என்ன செய்வது?’ என்று கேட்ட சமயத்தில் ‘ஒரு முழம் இறக்கிக்கொள்ளட்டும். அதைவிட அதிகப்படுத்த வேண்டாம்’ என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

மார்க்கப்பற்று குறைவாக, ஈமான் பலவீனமானவளாக உள்ளவள் ஒரு சாண் அளவுக்கோ அல்லது ஒரு முழம் அளவுக்கோ அல்லது அவளின் மார்க்கப்பற்று இலேசாக உள்ள அளவிற்கு அதிகமாக